பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 08 2024 **WEDNESDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யபப்பட்டதை எதிர்த்து இந்திய ஒலிம்பிக் சங்கம் மேல் முறையீடு செய்துள்ளது.

2. கைத்தறிப்பொருட்களின் பயன்பாட்டை அதிகரிப்பதில் கூட்டுறவுத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

3. கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. காஞ்சிபுரம், செங்கல்பட்டு, உள்ளிட்ட எட்டு மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. இலங்கைக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 249 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யபப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக இன்று இறுதிப்போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பினை அவர் இழந்தார்.

இதுகுறித்து மக்களவையில் அறிக்கை தாக்கல் செய்து பேசிய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, 50 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்றுள்ள வினேஷ் போகத்தின் எடை இன்று காலை 100 கிராம் அதிகமாக இருந்ததையடுத்து அவர் தகுதி நீக்கம் செய்யபப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த தகவல் கிடைத்ததும் பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பி டி உஷாவை தொலைபேசியில் தொடர்புகொண்டு உரிய மேல் நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

இதனையடுத்து, தகுதி நீக்கத்தை எதிர்த்து, இந்திய ஒலிம்பிக் சங்கம் சார்பில் மேல் முறையீடு செய்யபப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில், இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்று வரலாற்று சாதனை படைத்த வினேஷ் போகத் தற்போது தகுதி நீக்கம் செய்யபப்பட்டிருப்பது ஏமாற்றம் அளிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரின் இதயத்திலும் சாம்பியனாக வினேஷ் போகத் திகழ்கிறார் என்றும் குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வினேஷ் போகத்தின் தகுதிநீக்கம் துரதிருஷ்டவசமானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கருத்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், வினேஷ் போகத் என்றுமே வெற்றியாளராக திகழ்கிறார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்த தகுதி நீக்கம் வினேஷ் போகத்தின் மன ஆற்றலையோ, சாதனையையோ தடுத்து விட முடியாது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் ெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தகுதிநீக்கம் காரணமாக பதக்கத்தை தவற விட்ட போதிலும், அனைவரது இதயத்தையும் வினேஷ் போகத் வென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

இந்தியாவின் வளர்ச்சியை எந்த சக்தியாலும் தடுக்க இயலாது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

தேசிய கைத்தறி தினத்தையொட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

இந்தியா அடுத்த இரண்டாண்டுகளுக்குள் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கைத்தறிப்பொருட்களின் பயன்பாட்டை அதிகரிக்க பொதுமக்கள் உதவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொணடார்.

இதில் கூட்டுறவுத்துறையும் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

தேசிய கைத்தறி நெசவாளர் விருதுகளையும் திரு ஜெக்தீப் தங்கர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங், ஊரகப்பகுதிகளில் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் கைத்தறித்துறை முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.

சர்வதேச அளவிலான கைத்தறி வர்த்தகத்தில் நம் நாட்டின் பங்கு 90 சதவீதமாக உள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

இந்நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், சுதேசி இயக்கத்திற்கு பெரிய அளவில் பாலமாக அமைந்த கைத்தறி நெசவாளர்களை போற்றுகின்ற விதமாகவும், ஊக்குவிக்கும் வகையிலும் தேசிய கைத்தறி தினம் கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தொழில்நுட்பம் பெரிதும் வளர்ச்சியடைந்த இந்த காலத்திலும் கைத்தறி நெசவில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

கல்வித்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக அத்துறைககான இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாக கூறினார்.

ஏழை மாணவர்கள் இலவச கல்வி பெறுவதை உறுதி செய்யும் கல்வி உரிமைச்சட்டத்தை பஞ்சாப், கேரளா, மேற்குவங்கம், தெலங்கானா ஆகிய மாநிலங்கள் செயல்படுத்தவில்லை என்றும் திரு ஜெயந்த் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உலக அளவில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுமத்தின் கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் டாக்டர் **Byju** கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் நாமகிரி பேட்டையில் நடைபெற்ற மரவள்ளி உணவு திருவிழாவை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மரவள்ளி கிழங்கு பயிர்களில் ஏற்படும் நோய் தாக்குதலுக்கு நிரந்தர தீர்வினை தமது நிறுவனம் வழங்கி வருவதாக தெரிவித்தார்.

இந்தியா உட்பட 103 நாடுகளில் மரபள்ளி பயிர் சாகுபடி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மண் பரிசோதனை செய்து, மரவள்ளியை பயிர் செய்ய வேண்டும் என்றும் டாக்டர் **Byju** கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், அடுத்த 24 மணிநேரத்தில் எட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

<<<<<<>>>>>

சென்னையை அடுத்த மாமல்லபுரம் அருகே கடல்நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு கூறியுள்ளார்.

இன்று இப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<<<>>>>>

அஇஅதிமுக-வின் அவசர செயற்குழு கூட்டம் வரும் 16-ஆம் தேதி சென்னையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இதில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

அரியலூர் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு முத்ரா கடனுதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவிகளை ஆட்சியர் திரு ரத்தினசாமி இன்று வழங்கினார்.

-----------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையை தொடங்கிவைத்த ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன், இதில் கைத்தறி ரகங்களுக்கு 20 சதவீத தள்ளுபடி வழங்கப்படுவதாக கூறினார்.

--------------------

திருவள்ளூர் மாவட்டத்தில் ஹால்மார்க்கிங் குறித்த விழிப்புணர்வு நடை பயணத்தை மாவட்ட வருவாய் அலுவலர் திரு ராஜ்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

--------

தேனி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற மழைநீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியில் மாணவர்கள் பங்கேற்றனர்.

------------------

சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு சிறப்புகளை அறிந்துகொள்ளும் பொருட்டு 15 நாடுகளை சேர்ந்த 115 மாணவர்கள் கானாடுகாத்தான் பேரூராட்சிக்கு உட்பட்ட அரண்மனையின் சிறப்பு அம்சங்களை இன்று பார்வையிடுகின்றனர்.

---------------

தருமபுரி மாவட்டத்தில் கைத்தறி சிறப்பு கண்காட்சி மற்றும் விற்பனையை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று தொடங்கிவைத்தார்.

---------------

நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் வீடுகளில் ஏற்பட்ட விரிசல் தொடர்பாக புவியியல் ஆராய்ச்சிக்குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

---------------

ராணிப்பேட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தாய்பால் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கடந்த ஒருவார காலமாக நடைபெற்றன.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இலங்கைக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 249 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 248 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Avishka Fernando** 96 ரன் எடுத்தார்.

**Riyan Parag** மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

------------

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் மகளிர் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் அன்னுராணி இறுதிச்சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பினை இழந்தார்.

டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனியிடம் தோல்வியடைந்தது.

**<<<<<<END>>>>>**